செ.வெ.எண்.264 நாள்..23.04.2018.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 33 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.04.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 25 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400/– மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தென்காசி வட்டத்தைச் சார்ந்த 2 மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், சேரன்மகாதேவி வட்டத்தைச் சார்ந்த 4 மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், ஒரு பயனாளிக்கு விதவை உதவித் தொகை பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியக்கோட்டி, உதவி ஆணையர் (கலால்) திரு.வி.பழனிக்குமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.கந்தசாமி, சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் (சேரன்மகாதேவி) திரு. வெங்கட்ராமன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.